தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 143/ந/2024

நாள்.25.11.2024

திருமதி.P.ரம்யா,
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர், மன்னார்குடி நகராட்சி
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆஷாத் தெரு, கதவு எண்.53/1 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.P.ரம்யா என்பவரின் 26.12.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2024 அன்று பெறப்பட்டு, 143/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஆஷாத் தெரு, கதவு எண்.53/1 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.P.ரம்யா என்பவர் தனது 26.12.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சியின் நிர்வாகத்திற்குட்பட்ட வார்டு–1, பிளாக் 56, ஆஷாத் தெருவில் இருக்கும் சர்வே எண்.3541–ஐ ஒட்டி இருக்கும் செங்குளம் என்று அழைக்கப்படும் குளத்திற்கும் நகராட்சி சாலைக்கும் இடைப்பட்ட இடத்தில் நெடுகிலும் நகராட்சி நிலம் இருந்து வருகின்றது. குளத்தின் சுற்றுப்புறத்தில் அமைந்திருக்கும் நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் அதாவது குளத்திற்கும் சாலைக்கும் இடையில் உள்ள நகராட்சி நிலங்களை குறிப்பிட்டு இருப்பது என்பது நகராட்சி கள ஆய்வு செய்ய போதுமான அடையாளம் ஆகும். இவற்றில்

ஆக்கிரமிப்புகள் நாளுக்கு நாள் பெருகி, தற்போதைய நிலையில் குளத்தை ஒட்டியுள்ள நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஷெட்கள், கடைகள் என பல விதங்களில் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் சில ஆக்கிரமிப்புகள், நகராட்சியின் சாலை திருப்பத்தில், நகராட்சி சாலையின் (obstruction to vicinity of Municipal Road) பார்வையை மறைக்குமாறும் அமைந்துள்ளன. நகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை அத்துமீறி ஆக்கிரமிப்பதென்பது சமூகத்திற்கும், பொது நலத்திற்கும் முரணானதாகும். எதிரானதாகும் என்பதால் அவ்வாறான ஆக்கிரமணம் சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்புடையதல்ல. நகராட்சிக்கு சொந்தமான சொத்தினை காக்க வேண்டிய கண்ணியத்திற்குரிய நகராட்சி அதிகாரிகளும், ஆக்கிரமிப்பாளர்களின் அச்சுறுத்தல் காரணமாக ஆக்கிரமிப்பை அகற்ற தயங்குவது, அல்லது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக அல்லது மனச்சாய்வினால் அதனை கண்டும்–காணாமல் இருப்பது, நெஞ்சம் நிமிர்ந்து கடமையை செய்ய சுணக்கம் காட்டுவது ஆகியவற்றால் ஆக்கிரமிப்பாளர்கள் மேலும் ஊக்குவிக்கப்பட்டு பல்கிப்பெருகி, அதன்பிறகு, யாரோ ஒருவர் புகார் மனுவை எடுத்து கொண்டு டேபிள் டேபிளாக நகர்ந்து, அலுவலகப்படிகளில் ஏறி இறங்கி, தன்னால் தான் பேப்பர் விலை ஏறியதோ என்று எண்ணத்தோன்றும் அளவிற்கு மனுக்களை அனுப்பி, அவற்றிற்கு பதிலின்மை, அலட்சியம், காத்திருப்பு, காலதாமதம், மழுப்பல் பதில், நடவடிக்கை இன்மை என்று பல விதங்களில் அலைக்கழிக்கப்பட்டு பெரு முயற்சி செய்து அங்கே சுற்றி இங்கே சுற்றி, பிறகு நீதி கேட்டு இம்மாண்பமை முறைமன்றத்தின் கதவுகளை தட்ட வேண்டி உள்ளது.

மன்னார்குடி நகராட்சி ஆணையர் பல்வேறு குளங்களை சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்து மக்களின் பாராட்டை பெற்றவர், எனினும் மேலே குறிப்பிட்ட குளத்தின் சுற்றுப்புறம் உள்ள இடங்களில் நகராட்சிக்கு சொந்தமான இடங்களை, இன்று வரை அவரது கைக்கு எட்டாக்கனி போல இருக்கின்றது. நகராட்சிக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து இருப்பதால் வேலி வைக்க நகராட்சியால் இயலவில்லை. நகராட்சிக்கு சொந்தமான அவ்விடங்களில் ஆக்கிரமிப்பு இல்லாத சிறிய பகுதிகளிலும், புதர்கள் மண்டி கந்தரகோலமாக கண்றாவியாய், காணச்சகிக்காத நிலையில் கிடக்கிறது என்பதை ஆதங்கத்துடன் முறையிடுகிறேன். ஆக்கிரமிப்பின் உச்சகட்டமாக, குளத்தின் வடக்கு கரையை ஒட்டியுள்ள, நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்திருந்த தொன்மையான படித்துறையினை ஏறக்குறைய முழுமையாக இடித்து, அடைத்து, அங்கும் அனுமதி இன்றி கட்டடம் கட்டி, நீதி கேட்க இம்முறைமன்றமே நாதி என்ற அளவிற்கு நகராட்சிக்கு சொந்தமான இடம் அத்துமீறிய ஆக்கிரமிப்பாக சூறையாடப்பட்டு வருகின்றது. நகரின் பரபரப்பான இரண்டு சாலைகளை (பெரிய கடைத்தெரு, ருக்மணி பாளையம் ரோடு) இணைக்கும் சாலை, ஏறக்குறைய நகரின் மையப்பகுதி, அதுவும் நகராட்சி அலுவலகத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ள இந்த நகராட்சிக்கு சொந்தமான இடத்தின் ஆக்கிரமிப்பு, ஒவ்வொரு நகராட்சி தேர்தலின் போதும் அதிகமாகி அதிகமாகி, கழுதை கெட்டு குட்டிச்சுவரானது என்ற கிராம சொலவடைக்கு எடுத்துக்காட்டுபோல் ஆக்கிரமிப்புகள் பெருகி வருகின்றன. நகராட்சிக்கு சொந்தமான அந்த இடங்களில் நகராட்சியின் சர்வே கற்களை கூட காணவில்லை. அங்கு ஆக்கிரமிப்பு கட்டடங்களே உள்ளன.

மேலும், தனியார் சாக்கடை குழாய்கள் மூலம் கருப்பு மற்றும் சாம்பல் கழிவுநீர் நகராட்சிக்கு சொந்தமானதும் ஆக்கிரமிக்கப்பட்டதுமான நிலத்தின் வழியாக குளத்தில் கலக்கின்றது. கழிவறைகள், செப்டிக் டாங்க் ஆகியவை ஆக்கிரமிப்பினால் அமைக்கப்பட்டு உள்ளன. இவை குறித்து புகார் செய்ய அதிகாரிகளிடம் முற்பட்டால், பொய்கள், அதை மறைக்க சொல்லப்பட்ட பொய்கள், அதனை மறைக்க சொல்லப்பட்ட பொய்கள் என்பதே பதிலாக அமைந்து விடுவதாலும், புகாரை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் புகார்தாரரையும் சேரும் என்பதால் அதற்குள் நொந்து, "நமக்கெதுக்கு பொது நன்மைக்காக அலைச்சலும் பொல்லாப்பும்'' என்று பலர் ஒதுங்கி விடுகின்றனர் என்பது நிதர்சனத்தில் காணக்கூடியது, ஆதங்கப்படத்தக்கதாக அமைந்து விடுகின்றது.

ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால், ஆக்கிரமிப்பு அகற்றம் தொடர்பாக 14.12.2023 அன்று IIPGCMS முதல்வரின் முகவரித்துறை மூலம் அளிக்கப்பட்ட புகார் மனு அன்றைய தினமே மன்னார்குடி நகராட்சி ஆணையருக்கு முதல்வரின் முகவரித்துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 6560787 என்ற புகார் எண் அளிக்கப்பட்டு, இம்முறையீட்டு மனு நாளான தற்போது வரை எனக்கு பதிலளிக்கப்படாமல் நிலுவையில் இருந்து வருவதால் அதனை ஆவணமாக இந்த முறைமன்றம் முன்பு சமர்ப்பித்துள்ளேன். நகராட்சிக்கு சொந்தமான இடத்தை காக்க, அதனை மீட்க எனக்கு இருக்கும் அக்கறை இதுவரை நகராட்சிக்கும் இருந்திருக்கலாமே என்பதே எனது ஆதங்கமாகும்.

எனவே 14.12.2023 தேதி முதல், விசாரணை நாளுக்கு 3 நாள்கள் முன்பு வரை அதிகாரிகள் ஆக்கிரமிப்பை நீக்க என்னென்ன நடவடிக்கை எடுத்தனர் என்பதை தேதி வாரியாக அறிக்கை தயாரித்து உறுதிமொழி ஆவணமாக நகராட்சி ஆணையர் இந்த மன்றம் முன்பு விசாரணை நாளுக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். அதன் நகல், இம்முறைமன்ற நடுவம் மூலம் எனக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதற்கான உத்தரவை கேட்டுக்கொள்கிறேன்.

விசாரணை நாளுக்குள்ளாக, அந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தை கள ஆய்வு செய்து ஒரு வாரத்திற்குள் சர்வே குறியீட்டுக்கற்கள் நடப்பட வேண்டும். அந்த செயல்முறையின் புகைப்படங்கள் முறைமன்ற நடுவத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு DE OCCUPATION NOTICE/ANNOUNCEMENT அளிக்கப்பட்டு, உரிய காலத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் என்ற உத்தரவு கோருகிறேன். ஆக்கிரமிப்பு அகற்றம் பெயரளவில் இல்லாமல் முழுமையான ஆக்கிரமிப்பு அகற்றமான இருக்க வேண்டும் என்றும் உத்தரவு கோருகிறேன். இந்த முறை மன்ற நடுவத்தின் உத்தரவில் இடம்பெற்றுள்ள எந்த ஒரு ஷரத்தையும் மீறும் வகையில் அல்லது தணிக்கும் வகையில் அல்லாமல், ஆக்கிரமிப்புகள் மன்னார்குடி நகராட்சியால் அகற்றப்பட வேண்டும் என்று முறையிடுகிறேன்.

ஆக்கிரமிப்பு அகற்றத்தின் வீடியோ ஆவணம், ஆக்கிரமிப்பு அகற்றத்திற்கு முன்–பின் புகைப்படங்கள், நகராட்சி அதிகாரியால் மன்றத்தின் முன்பு விசாரணை நாளில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு கோருகிறேன். அங்கு குளத்தை ஒட்டிய நகராட்சி சாலை திருப்பத்திலும், சாலை சந்திப்பு அருகிலும், இது நகராட்சிக்கு சொந்தமான இடம், அத்துமீறி ஆக்கிரமிக்கக்கூடாது என்றவாறு, பார்வைக்கு எளிதாக தெரியும்படி பெரிய எழுத்துக்களில்

தகவல் புலகை நகராட்சியால் வைக்கப்பட வேண்டும் என்ற உத்தரவினை மன்றத்தின் முன்பு கோருகிறேன்.

மேற்கூறிய குளத்தின் சுற்றுப்பாதையில் உள்ளவற்றில் நகராட்சிக்கு சொந்தமான இடங்களில், நகராட்சி பாதுகாப்பு வேலி அமைக்க இந்த முறைமன்றம் உத்தரவு நல்க வேண்டும் என்று இந்த மன்றத்தினை மன்றாடுகிறேன்.

நகராட்சி தானே முன்வந்து 30 நாள்களில் மேற்கண்ட குளத்தை சுற்றி உள்ள இடங்களில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வேலி அமைக்க தயாராக இருந்தால், வேலி அமைத்திட கணிசமான தொகையான ரூ.30,000/– பொதுநலன் கருதி நகராட்சியின் தோளோடு தோள் நின்று செலுத்திட பொறுப்புள்ள குடிமகளாக விருப்பமுடன் உள்ளேன். இறைவன் நாடினால் இந்த தொகையினை உயர்த்தி செலுத்தவும் முயற்சி மேற்கொள்கிறேன் என்று இம்மன்ற நடுவத்தின் முன் தெரிவித்து கொள்கிறேன்.

இனியும் ஆக்கிரமிப்பை நீக்க 60 நாட்களுக்கு மேல் ஆகும்பட்சத்தில் அதற்கான செலவை ஆக்கிரமிப்பை அகற்றத்தவறிய அதிகாரிகளிடம் இருந்து வசூல் செய்து கொள்ள நகராட்சிக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

உரியfailing which clauses உடனான உத்தரவை நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அது தவிர, தேவையான அனைத்து உத்தரவுகளையும் இந்த முறைமன்ற நடுவம் நல்கும் என்ற முழு நம்பிக்கை உள்ளது என்று பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

நகராட்சி ஆணையர் ஆஜராகிடும்பட்சத்தில், வழக்கின் நியாயமான உண்மைகளை வெளிக்கொணர நகராட்சி ஆணையர் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய எனது உரிமையினை தக்கவைத்து கொள்கிறேன்.விசாரணை நாளுக்கு முன்பாக சர்வே எண். ஆக்கிரமிப்பாளரின் பெயர், ஆக்கிரமிப்பு வகை என ஆக்கிரமிப்பு குறித்த தகவல் அடங்கிய அறிக்கை முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட உத்தரவு வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.01.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் மன்னார்குடி நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. மன்னார்குடி நகராட்சி ஆணையாளர் தனது 14.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

மன்னார்குடி நகரளவை வார்டு எண்.1, பிளாக் எண்.56, நகரப்புல எண்.3541–க்கு அருகில் நகரப்புல எண்.3540 சர்க்கார் புறம்போக்கு கோவிலுக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டியுள்ளதற்கு இவ்வலுவலக ந.க.எண்.2469/2024/எப்1 நாள் 09.09.2024–ல் அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு அனுப்பப்பட்டது. திருமதி.சி.கோமதி க/பெ.T.சிங்காரவேலு என்பவர் தனது 15.07.2024ம் தேதிய பதில் கடிதத்தில் மேற்கண்ட இடத்தில் தாங்கள் பல தலைமுறையாக அப்பகுதியில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் கோவிலின் பரம்பரை பூசாரியாக உள்ளதால்,

கோவில் உருவானது முதல் வீடுகட்டி குடியிருந்து வருவதாவும், வருவாய்துறைக்கு B ரசீது 70 ஆண்டுகளாக கட்டிவருவதாகவும், மின் கட்டணம் மற்றும் வீட்டுவரி சுமார் 35 வருடங்களுக்கு மேலாக செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதனைத்தொடர்ந்து, ஆவணங்களின்படி, சர்க்கார் புறம்போக்கு இடம் கோவிலுக்கு சொந்தமான இடம் என உள்ளதாலும், மேற்படி இடத்தில் வருவாய் துறை மூலம் உரிய நடவடிக்கை எடுக்க இவ்வலுவலக 20.08.2024ந்தேதிய கடிதத்தில் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் திருமதி.P.ரம்யா, என்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு இணையவழி அனுப்பிய மனு எண். 6560787 நாள்.31.01.2024க்கு உரிய பதில் 12.01.2024–ல் முதல்வரின் முகவரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) எனவே வருவாய்துறை மூலமாக ஆக்கிரமிப்புகள் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளளப்பட வேண்டுமென்பதால், இம்முறையீட்டிலிருந்து நகராட்சியினை விடுவித்திட கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் ஆகியோரை 15.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 19.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திருமதி.P.ரம்யா15.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

புகார்தாரரான என் தரப்பில் 26.12.2023 தேதியிட்ட எனது புகார் மனுவிற்கு விசாரணை தேதி வரை எதிர் வழக்குரை தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் தவறி இருப்பதை முறைமன்ற விதிகளுக்கு முரணாக உள்ளதென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதையடுத்து எதிர்மனுதாரர் தரப்பில் முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முறைமன்றம் பார்வையிட அனுமதி அளித்ததையடுத்து, எதிர்மனுதாரர் முற்றிலும் சம்மந்தமில்லா பதில் கொடுத்து உள்ளார் என்பது புகார்தாரர் தரப்பில் முறைமன்ற நடுவம் முன்பு தெரிவிக்கப்படுகிறது.

புகாரில் உள்ள சங்கதிகளை வாக்குமூலத்திலும் சுருங்க தெரிவித்துவிட்டேன். எனினும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு மூன்று வருடங்கள் ஆகி விட்டன என்பதால் தாங்கள் ஆக்கிரமிப்பை நீக்கிட அவசியம் இல்லை என்று எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நகராட்சி சாலை போக, நகராட்சி இடங்கள் (குளத்திற்கும் நகராட்சி சாலைக்கும் இடைப்பட்டது ஆக்கிரமிப்பு இருப்பதை hand–ன் glove ஆக இருந்து நீக்காமல் இருப்பதை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினேன்.

பதினைந்து நாட்களுக்குள் ஆக்கிரமிப்பு நீக்கப்பட வேண்டும் என்றும் புகார்தாரரை மேலும் தட்டிக்கழிக்காமல் ஆக்கிரமிப்பு நீக்கம் செய்யப்பட வேண்டும். புகார்தாரரின் புகார் என்ன என்று படித்துக் கூட பார்க்காமல் முறைமன்ற நடுவத்தில் எதிர்மனுதாரர் தரப்பு வந்து இருப்பதையும், சம்மந்தமில்லா பதில் தாக்கல் செய்து இருப்பதையும் தெரிவித்தேன். இது பழையகதை என்று

தவிர்ப்பதற்கு இல்லை.நகராட்சி சொத்தை நகராட்சி மீட்க கூட நடவடிக்கை எடுக்காமல் உள்ள சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு மற்றும் துறைரீதியான நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று தெரிவித்தேன்.

முறைமன்றத்தின் Proceedings No.ஆணை எண்.185/மா/2023, 214/மா/2023, 38/மா/2021, 170/2016, 129/மா/2022, 118/மா/2023, 114/மா/2022, 24/ந/2021 ஆகியவற்றின் சுருக்கத்தினையும் எனது தரப்பில் படித்துக்காண்பிக்கப்பட்டது.

முறைமன்றம் நான் சமர்ப்பித்த புகார்மனு அதனுடன் கூடிய மனுக்கள் முதலியவற்றை கருத்தில் கொள்ள தெரிவித்தேன்.

இது குளத்தைப் பற்றிய வழக்கு அல்ல என்றும் குளத்தை ஒட்டிய நகராட்சி இடத்தின் ஆக்கிரமிப்பு பற்றிய வழக்கு என்று தெரிவித்துள்ளார்.

5) மன்னார்குடி நகராட்சி ஆணையாளர் சார்பாக 15.10.2024 அன்றைய விசாரணையில் நகராட்சி நகரமைப்பு ஆய்வர்(பொ) ஆஜராகி கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திருமதி.P.ரம்யா அவர்கள் நகராட்சிக்குச் சொந்தமான சாலை ஓரத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மற்றும் குளத்தில் கழிவு நீர் கலக்காமல் நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

- மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட ஆஷாத் தெருவில் சாலை மற்றும் குளத்தின் இடையே உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை நகர சார் ஆய்வாளர் மூலம் அளந்து உரிய அறிவிப்பு வழங்கி மற்றும் உரிய கால அவகாசம் வழங்கியும், வணிக ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- **15 தினங்களுக்குள்** மேற்படி குளத்தில் கழிவுநீர் கலப்பதை தடுக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
- மேலும் மன்னார்குடி நகராட்சி ஆணையாளரின் 14.10.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுகொண்டுள்ளார்.

6) மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், மன்னார்குடி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் (பொ) வாக்குமூலம் மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனுவில் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சி நிர்வாகத்திற்குட்பட்ட வார்டு–1 பிளாக் 56, ஆஷாத் தெருவில் இருக்கும் சர்வே எண்.3541–ஐ ஒட்டி

இருக்கும் செங்குளம் என்ற அழைக்கப்படும் குளத்திற்கும் நகராட்சி சாலைக்கும் இடைப்பட்ட இடம் நெடுகிலும் நகராட்சி நிலம் இருந்து வந்தது என்றும், குளத்திற்கும் சாலைக்கும் இடையில் உள்ள நகராட்சி நிலங்களை ஆக்கிரமித்து ஷெட்கள், கடைகள் என பலவிதங்களில் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட ஆஷாத் தெருவில் சாலை மற்றும் குளத்தின் இடையே உள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை நகர சார் ஆய்வாளர் மூலம் அளந்து உரிய அறிவிப்பு வழங்கி மற்றும் உரிய கால அவகாசம் வழங்கியும், வணிக ஆக்கிரமிப்புக்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், 15 தினங்களுக்குள் மேற்படி குளத்தில் கழிவுநீர் கலப்பது தடுக்கப்படும் என்றும் நகராட்சி ஆணையரின் சார்பாக நகராட்சி நகரமைப்பு ஆய்வர் (பொ) தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில்மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ள செங்குளத்தை ஒட்டிய நகராட்சி இடத்தினை, மன்னார்குடி நகராட்சி சார்பாக நகரமைப்பு ஆய்வர்(பொ) தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு அளவீடு செய்து, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ல் உள்ள வழிகாட்டுதல்களின்படியும், மாண்பமை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படியும், தமிழ்நாடு அரசு சட்ட விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படியும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், மேலும் 15 தினங்களுக்குள் மேற்படி குளத்தில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் மன்னார்குடி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு மன்னார்குடி நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

2024ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 25 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திருமதி.P.ரம்யா,
எண்.53/1, ஆஷாத் தெரு,
மன்னார்குடி–614 001.
திருவாரூர் மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
மன்னார்குடி– 614 001.
திருவாரூர் மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)